**O.S.No.19/2022**

வா.சா.2 திருமதி.சௌந்திரவள்ளி, க/பெ.செல்லையா.
நாள் : 07.03.2023 நேரம் : 12.40 P.M

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகளால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்–**

1. இந்த வழக்கில் நான் 1வது வாதி என்றால் சரிதான். 2வது வாதி பகவதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனது தங்கை 2ம் வாதி 03.01.2023ம் தேதி வாசா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு 07.02.2023ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த சமயம் நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன்.

2. வாசா.1 தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தையே தான் நானும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் வாசா.1 என்ன நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாசா.1 எனது தங்கை எனக்கும் சேர்த்து சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

3. 05.08.2012ம் தேதி ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து கிடைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வாய்மொழியாக எந்த பாகமும் பிரித்துகொள்ளவில்லை. 16.07.2014ம் தேதி 2ம் பிரதிவாதி முத்துராமலிங்கம் 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு தாவா சொத்தை வாய்மொழியாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்தை எனது தங்கையும் தங்கையின் கணவரும் தான் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி தான் வாய்மொழி கிரையம் பெற்றதன் மூலமாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கோ 2ம் பிரதிவாதிக்கோ எந்தவிதமான பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியம் என்று

சொன்னால் சரியல்ல. நாளது தேதி வரை 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.57PM

சாட்சியின் கையொப்பம்